பக்கங்கள் 14+5

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

## சீனா பறக்கிறார் பிரதமர் தினேஷ்



பிரதமர் தினேஷ் குணவர்தன அடுத்த வாரம் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று

04


முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 10 சனிக்கிழமை 23.03.2024 அதிர்வு 236



# ராஜபக்ஷக்களுக்கு நான் எதிரி அல்லன்

## அவர்களும் எனக்குப் பகைவர் அல்லர்

## இப்படி ஓதுகின்றார் ஜனாதிபதி ரணில்



"ராஜபக்ஷக்களுக்கு நான் எதிரி அல்ல. அவர்களும் எனக்கு எதிரி அல்ல. அவர்களிடமிருந்து நான் பிரதமர் பதவியையோ - ஜனாதிபதிப் பதவியையோ பறித்தெடுக்கவில்லை. நாடு எதிர்நோக்கிய நெருக்கடியான கட்டடத்தில் அவர்களே எனக்குப் பதவிகளைத் தந்து ஒதுங்கி நின்றார்கள்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"தற்போதைய அரசுக்கு ராஜபக்ஷக்கள் பூரண ஆதரவை வழுங்குகின்றார்கள். இதனை நான் வரவேற்கின்றேன். இந்த அரசுக்குள் எந்தவித முரண்பாடுகளும் இல்லை. அரசியல் இலாபம் கருதி சில ஊடகங்கள் வெளியிடும் பொய்யான செய்திகளை எமது மக்கள் நம்பமாட்டார்கள் என்று நான் நினைக்கின்றேன்." - என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் சிரேஷ்ட சிங்கள ஊடகவியலாளருக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

04

# வாகன விபத்துக்களில் ஐவர் பரிதாப மரணம்!




இலங்கையின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 5 பேர் உயிரிழந்தனர்.

மொரந்துடுவ, கிரிந்த, புத்தளம், மாதம்பே மற்றும் அதுருகிரிய ஆகிய பகுதிகளில் இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று அறிவித்துள்ளது.

மொரந்துடுவ – களுத்துறை – பண்டாரகம வீதியில் தெல்கடை பகுதியில் பயணித்த மோட்டார் சைக்கிள், செலுத்துநரின் கட்டுப்பாட்டை மீறி வீதியை விட்டு விலகி மரத்தில் மோதிய விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

இதேவேளை, திஸ்ஸமஹாராமய கிரிந்த வீதியில் விலமுல்ல சந்திக்கு அருகாமையில், கிளை வீதியில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள், பிரதான வீதியில் திடீரென பிரவேசித்து சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல், வீதிக்கு அருகில் இருந்த சுவரில் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் பலத்த காயங்களுக்குள்ளான சாரதி உயிரிழந்ததுடன் பின்னால் அமர்ந்து சென்றவர் காயமடைந்து அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

உயிரிழந்தவர் திஸ்ஸமஹாராம பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, புத்தளம் குருநாகல் வீதியில் கல்குளம் பிரதேசத்தில் குருநாகலிலிருந்து புத்தளம் திசை நோக்கிப் பயணித்த லொறி ஒன்று எதிர்த் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் லொறி கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற பெண்ணும் மற்றும் பின்னால் பயணித்த பெண்ணும் சிறு குழந்தையும் காயமடைந்து புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சாரதி உயிரிழந்தார்.

ஆனமடுவ பிரதேசத்தில் வசிக்கும் 47 வயதுடைய பெண்ணே இவ்வாறு மரணித்தார்.

லொறியின் சாரதியும் காயமடைந்து புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, பேலியகொடை புத்தளம் வீதியில் 63 ஆவது கிலோமீற்றர் தூணுக்கு அருகில் சிலாபத்திலிருந்து மாராவில் திசை நோக்கிச் சென்ற கார் வீதியைக் கடந்த பாதசாரி மீது மோதியது.

விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி, சிலாபம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்தார்.

54 வயதான இவர், மாதம்பே, மல்லவாகர பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பில் காரின் சாரதி கைது செய்யப்பட்டார்.

அதேநேரம், அதுருகிரிய பனாகொட எம்புல்கம வீதியில் பனாகொடை சந்திக்கு அருகில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று செலுத்துநரால் கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி சுவரில் மோதி விபத்து ஏற்பட்டது.

படுகாயமடைந்த சாரதி ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பனாகொடை – ஹோமாகம பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய நபரே இவ்வாறு மரணித்தார்.

## பஸ்ஸுக்குள் மாணவியை சீண்டிய இளைஞன் கைது



(எம்.எப்.எம். அலி)

பலாங்கொடை பஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸொன்றில் 14 வயது மாணவிக்கு, அந்தரங்க உறுப்பைக் காட்டிய இளைஞன் ஒருவர் பலாங்கொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி மாணவி மாலை வகுப்பை நிறைவு செய்துவிட்டு தனது வீட்டுக்குச் செல்ல பஸ் ஆசனத்தில் அமர்ந்து இருந்த வேளை, அருகில் இருந்த இளைஞன் ஒருவர் தனது அந்தரங்க உறுப்பைக் காட்டியுள்ளார்.

பஸ்ஸில் இருந்த பயணிகள் சிலர் இந்த விடயத்தை பலாங்கொடை பொலிஸாரிடம் தெரிவித்ததை அடுத்து அந்த இளைஞன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞன், பலாங்கொடை மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

## கும்பாபிஷேக மலர் வெளியீடு நாளை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசாமி ஆலய கும்பாபிஷேக மலர் வெளியீடு நாளை மதியம் 12 மணியளவில் கந்தசாமி தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆலய திருப்பணிச் சபையின் தலைவர் செ.தவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை ஆலய திருப்பணிச் சபை வெளிநாட்டு ஒன்றியப் பொறுப்பாளர் வே.தர்சனும், ஆசியுரையை ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ முத்துக்குமார கணேசக் குருக்களும், மலர் அறிமுக உரையை திருப்பணிச் சபை உறுப்பினர் த.தவகரனும், நூல் ஆய்வுரையை நல்லூர் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளும் ஆற்றவுள்ளனர்.

கயிற்றசிட்டி கந்தசாமி ஆலய கும்பாபிஷேக மலர் அனுசரணையாளர் கைலாயப்பிள்ளை சுகிதரன் மலரை வெளியிட்டு வைக்க ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ முத்துக்குமார கணேசக்குருக்கள் முதற்பிரதியைப் பெறுவார்.



# 40 வீதமான தாதியர்கள் இலங்கையைவிட்டு ஓட்டம்

## ஜனாதிபதி ரணில் கவலை

இலங்கையில் பயிற்றுவிக்கப்படும் 100 தாதியர்களில் 30 - 40 பேர் வரையிலானவர்கள் நாட்டை விட்டுச் செல்கின்றனர் என்றும், இதே நிலை தொடர்வது சிறந்ததல்ல என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

உலகின் உயர்வான சுகாதார சேவையைக் கொண்டிருக்கும் எமது நாட்டின் சுகாதாரத்துறையை மேம்படுத்தி அதனைப் பொருளாதார வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக்கொள்வது அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நெதர்லாந்து அரசின் இலகுக் கடன் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் புதிய கட்டடத்தை மக்கள் பாவனைக்குக் கையளிப்பதற்காக நேற்று இடம்பெற்ற நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

வைத்திய மற்றும் தாதியர் சேவைக்காக பயிற்றுவிக்கப்படுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்திடம் தான் கோரிக்கை விடுத்திருப்பதாகவும், அதற்கான வசதிகளை மேம்படுத்த வேண்டியிருப்பதாகவும் ஜனாதிபதி கூறினார்.

அதேநேரம் தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலையான மற்றும் பசுமை பல்கலைக்கழகத்துக்கான வைத்தியசாலை ஒன்றை நடத்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கும் நிலையில் லயிசியம் வைத்தியசாலையும் அதற்கான கோரிக்கையை விடுத்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேபோல் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களையும் வைத்திய துறைக்குள் உள்வாங்கி நவீன வைத்திய முறைமைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பருத்தித்துறை வைத்தியசாலைக்குப் புதிய கட்டடமொன்றை நிர்மாணித்தமைக்காக நெதர்லாந்து அரசுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

பருத்தித்துறை வைத்தியசாலையின் புதிய அபிவிருத்திக்காக நெதர்லாந்தின் இலகுக் கடன் முறையின் கீழ் 400 கோடி ரூபா வழங்கப்பட்டிருப்பதோடு, அதனால் வைத்தியசாலையின் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

நினைவுப் படிகத்தை திரைநீக்கம் செய்து புதிய கட்டடத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அதனை மேற்பார்வை செய்த பின்னர் வைத்தியசாலை பணிக்குழுவினருடன் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கிடைக்கப் பெற்றிருக்கும் இந்தப் புதிய வைத்திய வசதிகளை நாட்டின் சுகாதார சேவை முன்னேற்றத்துக்காகச் செயற்றிறனுடன் பயன்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தும்போது முடிந்த வகையில் ஒன்றுபட்டுச் செயற்படுமாறும் ஆளுநர் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹொராப்ச்சும் உரையாற்றினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர்களான அங்கஜன் இராமநாதன், காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வைத்தியசாலையின் பணிக்குழாத்தினர் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரியை அறிந்துள்ள மைத்திரியை பொலிஸார் உடனடியாக அணுக வேண்டும்

## மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்து




"முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, தனக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரியைத் தெரியும் எனப் பகிரங்கமாகக் கூறுகின்றார். இது ஒரு அதிர்ச்சித் தகவல் குண்டு. பொலிஸார் உடனடியாக மைத்திரி பாலவை அணுகி, உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரி பற்றிய தகவல்களை வாக்குமூலமாகப் பெற வேண்டும். அதுபோல் இத்தனை நாள் ஏன் இந்தத் தகவலை அவர் மறைத்து வைத்தார் என்ற கேள்விக்கும் பதிலை வாக்கு மூலமாகப் பெற வேண்டும். இந்த இரண்டு வாக்குமூலங்களின் அடிப்படையில் உடனடியாக பொலிஸ் விசாரணைகளை முடுக்கி விட்டு, குற்றவாளிகளைக் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும். கொழும்பு – கொச்சிக்கடை, நீர்கொழும்பு – கடுவாபிடிய, மட்டக்களப்பு ஷியோன் தேவாலயங்களிலும், கொழும்பு நட்சத்திர விடுதிகளிலும் கொல்லப்பட்ட அப்பாவிகளின் பெயரால் இதை நான் கூறுகின்றேன்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் இல்ல வளவில் இன்று ஊடகங்களைச் சந்தித்த மனோ கணேசன் எம்.பி. இது பற்றி ஊடகங்களுக்கு மேலும் கூறியதாவது:–

"நீதிமன்றம் கேட்டால், தான் உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரி பற்றிய தகவல்களைத் தருவேன் எனவும், அந்தத் தகவல்களை நீதிபதிகள் இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் கூறும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மூளையை பரிசோதனை செய்ய வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

நீதிமன்றம் இவரைத் தேடி வந்து கோராது. இவர்தான் பொலிஸாரைத் தேடிச் சென்று தகவல்களை வழங்க வேண்டும். குற்றவாளி பற்றிய தகவல்களை அறிந்த இவர் இது பற்றி இதுவரை மௌனமாக இருந்தமை குற்றமாகும்.

தான் தரும் தகவல்களை நீதிபதிகள் இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும் என ஏன் இவர் கூறுகின்றார் என எனக்கு விளங்கவில்லை. பொதுமக்களின் வரிப்பணத்தில் பாதுகாப்புப் பெற்று வாழும் இவர் யாரைக் கண்டு பயப்படுகின்றார் எனவும் எனக்குத் தெரியவில்லை.

இது பற்றிய ஆணைக்குழுவில் சாட்சியம் அளித்தபோது இது தொடர்பில் ஏன் ஆணைக்குழு அதிகரிகளுக்குத் தான் அறிந்த உண்மைத் தகவல்களைக் கூறவில்லை என்பதற்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதில் கூறியாக வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு சூத்திரதாரி பற்றிய தகவல்களை இதுவரை மறைத்து வைத்தமை, மைத்திரிபால சிறிசேனவை பிடித்த ஒரு குற்றவியல் நோய். இந்த நோய் இலங்கை பொலிஸுக்கும் வந்துவிடாமல் பொலிஸ் துறை அமைச்சர் டிரான் அலஸும், பொலிஸ்மா அதிபரும் கவனமாகச் செயலாற்ற வேண்டும்."

– என்றார்.

# ரணிலுடனான பேச்சு வெற்றி!

## மொட்டுவின் ஸ்தாபகர் பஸில் தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சு வெற்றியடைந்தது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் கூறினார்.

அத்துடன், இந்தக் கலந்துரையாடல்களின் முன்னேற்றம் தொடர்பில் எதிர்காலத்தில் ஊடகங்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ராஜபக்ஷக்களுக்கு...**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடைபெறும். அந்தத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நான் இன்னமும் முடிவு எடுக்கவில்லை. என்னைப் பொது வேட்பாளராகப் போட்டியிடுமாறும் சிலர் பரிந்துரைத்துள்ளனர். அதேவேளை, மொட்டுக் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளர் களமிறங்குவாரா? இல்லையா? என்பது தொடர்பில் என்னால் பதில் கூற முடியாது. அது தொடர்பில் அந்தக் கட்சியின் தலைமையிடம்தான் கேட்க வேண்டும்.

நெருக்கடியான கால கட்டத்திலும் இந்நாட்டு மக்களுக்காக நான் பணியாற்றுகின்றேன். பலரும் எனக்கு ஆதரவு வழங்குகின்றனர். அந்த ஆதரவு தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

நாடு மெல்ல மெல்ல மீண்டெழுந்து வருகின்றது. எனவே, எதிரணியினரும் கட்சி வேறுபாடுகளைக் களைந்து அரசின் வேலைத்திட்டத்தில் ஒன்றிணைய வேண்டும்." – என்றார்.

**சீனா பறக்கிறார்...**

தெரிவிக்கப்படுகின்றது.

சீன வெளிவிவகார அமைச்சை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகம் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

அந்த நாட்டு பிரதமரின் அழைப்புக்கிணங்க பிரதமர் தினேஷ் குணவர்தன சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தன, எதிர்வரும் 30ஆம் திகதி வரை அங்கு தங்கியிருந்து பல தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை செலுத்த வேண்டிய மொத்த வெளிநாட்டுக் கடனில் சீனா 10 சதவீதத்தைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வணிகப் பொருள்களின் ஏற்றுமதியில் சிறிதளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது

இந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் வணிகப் பொருள்களின் ஏற்றுமதியில் சிறிதளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

அந்த சபை விடுத்துள்ள தரவு அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் வணிகப் பொருள்களின் ஏற்றுமதி 983.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

இது 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 0.17 சதவீத வளர்ச்சியாகும்.

அதேநேரம் 2024ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் பெப்ரவரி மாதத்தில் ஏற்றுமதி செயல்திறன் 1.3 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் 1.95 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஏற்றுமதி செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதுடன், 2023ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் 1.96 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஏற்றுமதி நடவடிக்கைகள் பதிவாகியுள்ளன.

இதனடிப்படையில் கடந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் ஏற்றுமதி துறையில் 0.30 சதவீத வீழ்ச்சி பதிவாகியுள்ளது.



# ஐ.தே. கட்சியின் அமைப்பாளராக எஸ்.எல்.எஸ்.முஹீஸ் நியமனம்

(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனைத் தொகுதியின் கல்முனை 12 ஆம் வட்டாரம் தொடக்கம் 17 ஆம் வட்டாரம் வரைக்குமான ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக எஸ்.எல்.எஸ்.முஹீஸ் கட்சியின் தலைமையகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட ஐ.தே.க. தலைவியும் முன்னாள் பிரதியமைச்சருமான அனோமா கமகேவினால் இதற்கான நியமன கடிதம் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

கல்முனை பிரதேசத்தில் மிக நீண்ட காலம் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாட்டாளராக முஹீஸ் செயற்பட்டுவருகின்றார். இவர், கடந்த கல்முனை மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இளநீரின் விலை அதிகரிப்பு!

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலையினை அடுத்து இளநீரின் விலை அதிகரித்துள்ளது.

இளநீருக்கான தேவை அதிகரிப்பு மற்றும் உற்பத்தி செய்யும் விகிதம் குறைவடைந்துள்ளமை போன்ற காரணங்களினால் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 100 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட இளநீர் தற்போது 180 ரூபாய் முதல் 250 ரூபாவிற்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இது தேவையற்ற வம்பு!

தமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் தன் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான கரிசனையை திசை திருப்பும் எண்ணத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பிரேரணை மீதான தமது பதிலுரையில் கிளப்பிவிட்ட கதை சூடு பிடித்திருக்கின்றது.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றதாகத் தெரிவித்து அவர் அவிழ்த்து விட்ட விடயமே இப்போது புதிய சர்ச்சைகளைக் கிளப்பி இருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபயவை பதவியை விட்டு ஓட வைத்த மக்கள் எழுச்சி போராட்டமான அறகலயவின் காலத்தை ஒட்டிய கதை ஒன்றையே சபாநாயகர் தமக்கு எதிரான மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குப் பதிலளித்துப் பேசும்போது அவிழ்த்து விட்டு இருக்கிறார்.

அப்போது, அரசமைப்பை மீறி புதிய அரசு ஒன்றைத் தமது தலைமையில் அமைக்கும்படி தமக்கு அழுத்தம் தரப்பட்டதாகவும், அதில் வெளிநாட்டின் பலம் வாய்ந்த தரப்பு ஒன்று நேரடியாக ஈடுபட்டதாகவும், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார். எனினும், அந்த அழைப்பை தாம் நிராகரித்து விட்டார் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

இந்தப் பேச்சையே தமக்கு வலிமையான ஆயுதமாக எடுத்துக்கொண்டு பிரச்சாரப் போர் நடத்தக் கிளம்பி இருக்கின்றார்கள் தென்னிலங்கை பௌத்த - சிங்கள தேசியவாதிகள் எனத் தம்மை வழமையாக அடையாளப்படுத்திக் கொள்ளும் விமல் வீரவன்ஸ மற்றும் சரத் வீரசேகர போன்றோர்.

மேற்படி அறகலய நெருக்கடி சமயத்தில் - 2022 ஜூலை 9ஆம் திகதி - சபாநாயகரை அவரது உத்தியோகபூர்வ இல்லத்துக்குத் தேடிச்சென்று சந்தித்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங், அவரை கோட்டாபயவின் இடத்துக்கு அரசுத் தலைவராக அரசைப் பொறுப்பேற்று நடத்தும்படி அழுத்தம் கொடுத்தார் என்று 2023 ஏப்ரலில் தமது புத்தகம் ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியிருந்தார் விமல் வீரவன்ஸ.

அந்த விடயத்தைத்தான் இப்போது நாடாளுமன்றத்தில் தமது உரை மூலம் சபாநாயகர் வெளிப்படுத்தியிருக்கின்றார் என்று குறிப்பிட்டுள்ள சரத் வீரசேகர, அந்த விடயத்தை இப்போதாவது வெளிப்படுத்த முன்வந்தமைக்காக சபாநாயகரை தாம் பாராட்டுகின்றார் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்த விடயத்தில் அமெரிக்காவின் நேரடி தலையீடு குறித்து 2023 நவம்பரில் சமிந்த வீரக்கொடி எம்.பி. நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது கூட அமைதி காத்த சபாநாயகர், இப்போதாவது வாய் திறந்தமை மெச்சத்தக்கது என்று சரத் வீரசேகர இதனை வரவேற்றிருக்கின்றார்.

யுத்த காலத்தில் தமிழர்களுக்கு எதிராகப் பெரும் கொடூரம் புரிந்த கடற்படையின் மூத்த தளபதிகளில் றியர் அட்மிரல் சரத் வீரசேகரவும் ஒருவர். அவர் புரிந்தவை என்று கூறப்படும் யுத்த குற்றங்களுக்காக ஏற்கனவே அவருக்கு தமது நாட்டில் பயணத் தடையை பிரகடனப்படுத்தாமல் விதித்துப் பேணுகின்றது அமெரிக்கா.

அண்மையில் நாடாளுமன்ற குழுக்களின் தலைவர்களுக்கான அமெரிக்க விஜயத்தின் போது தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் கண்காணிப்பு குழுவின் தலைவரான சரத் வீரசேகரவுக்கு மாத்திரம் விசா வழங்க அமெரிக்கா மறுத்துவிட்டது.

அதனால் அமெரிக்கா மீது கடும் காட்டத்தில் இருக்கும் சரத் வீரசேகர, சபாநாயகரின் இப்போதைய அறிவிப்பை அமெரிக்காவுக்கு எதிரான தனது சண்டப் பிரசண்டத்துக்கு வகையான ஆயுதமாகப் பயன்படுத்த முயல்கின்றார்.

அதேபோல அமெரிக்கா உட்பட மேற்குலகை எதேச்சாதிகார சக்திகளாக காட்டி, அவற்றுக்கு எதிராக களைபரம் பண்ணுவதையே தமது வழமையான அரசியல் கொள்கைக் கோட்பாடாக வைத்திருக்கும் விமல் வீரவன்ஸ, இத்தகைய விடயங்களை ஊதிப் பெருப்பித்து, நாட்டின் தேசிய இறையாண்மைக்கு சவால் விடுகின்றது அமெரிக்கா என்ற பாணியிலான பிரச்சாரத்தை முன்னெடுப்பதில் வியப்பேதும் இல்லை.

இந்தக் குற்றச்சாட்டை ஏற்கனவே அமெரிக்கத் தூதுவர் உடனடியாக வெளிப்படையாகவே மறுத்துவிட்டார்.

அப்படி இருக்க அமெரிக்காவின் பெயரைக் குறிப்பிடாமல் அப்படி ஒரு சம்பவம் நடைபெற்ற மாதிரியான தோறணையை ஏற்படுத்தும் விதத்தில் கருத்து வெளியிட்டு, சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்திருக்கின்றார் சபாநாயகர்.

இன்றைய அரசியல் காலகட்டச் சூழ்நிலையில் இது இலங்கைக்கு தேவையற்ற வம்பு.



# சீனப் பல்கலைப் பிரதிநிதிகள் கிழக்குப் பல்கலைக்கு விஜயம்

## நேற்று ஒப்பந்தம் கைச்சாத்து

**(நூருல் ஹுதா உமர்)**

சீனாவின் முன்னணி பல்கலைக் கழகமான யுனான் பல்கலைக்கழக பிரதிநிதிகள் நேற்று இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து கலாச்சார மற்றும் மொழி ரீதியான பரிமாற்றங்களை செய்வதற்கான நிலையம் (Confucius Unit) ஸ்தாபிக்கும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

இந்நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வந்தாறுமூலையில் அமைந்துள்ள பல்கலைக்கழக மூதவை கட்டட தொகுதியில் இடம்பெற்றது.

யுனான் பல்கலைக்கழக உபபீடாதிபதி ஹு ஜின்மிங்க் தலைமையிலான குழுவினர் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், பிரதி உபவேந்தர், பதிவாளர் உட்பட சர்வதேச விவகாரங்கள் திணைக்கள இணைப்பாளர் ஆகியோருடன் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்த நிலையம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் உபவேந்தர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அத்துடன் சீனப் பல்கலைக்கழக பிரதிநிதிகளுக்கும் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தருக்குமிடையிலான கூட்டம் சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர், பீடாதிபதிகள், பதிவாளர், நூலகர், நிதியாளர் அத்துடன் சர்வதேச விவகாரங்கள் திணைக்கள இணைப்பாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் பல்கலைக்கழக சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, இந்த நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழகம் சார்பாக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கத்துக்கும், யுனான் பல்கலைக்கழகம் சார்பாக அதன் உபபீடாதிபதி ஹு ஜின்மிங்க்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இதன்போது, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரின் எண்ணக்கருவில் உருவாக்கப்பட்டு, அவரது நெறிப்படுத்தலில் இப்பல்கலைக்கழக ஊழியர் மேம்பாட்டு நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட நிருவாகத் தலைமைத்துவ பயிற்சிநெறிகளை பூர்த்தி செய்த கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

ஊழியர் மேம்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர்சி தம்பரேசன் தலைமையில் நடைபெற்ற இச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் ஹு ஜின்மிங்க் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இதில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன். விஜயத்தின் ஓர் அங்கமாக ஊழகெரஉரைஎருவை நிலையத்திற்கான உத்தேச இடம் சீன பிரதிநிதிகளால் பார்வையிடப்பட்டது.

மேற்படி நிலையம் இலங்கை கொழும்பு பல்கலைக்கழகம் உட்பட உலகின் பல்வேறு பகுதிகளிலும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.










# சவூதி அரேபியத் தூதுவருடன் எம்.எஸ் தௌபீக் எம்.பி. சந்திப்பு



இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் ஹாலித் ஹமூத் அல் – கஹ்தானிக்கும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

சவூதி அரேபிய தூதரகத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது சமூக, அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.



# தண்ணீர் தினத்தை முன்னிட்டு விசேட பூசை, பொங்கல் நிகழ்வு









**(ஹஸ்பர் ஏ.எச்)**

சர்வதேச தண்ணீர் தினமான நேற்று தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியின் விவசாயிகளால் விசேட பூசை நிகழ்வொன்று வெம்பு பகுதி வயல் நிலத்தில் மேற் கொள்ளப்பட்டது.

கடும் மழையுடனான கால நிலையில் மேற்கொள்ளப்பட்ட இந்த நிகழ்வினை தம்பலகாமம் பிரதேச விவசாய சம்மேளனங்கள், பிரதேச செயலகம், கமநல அபிவிருத்தி திணைக்களம், நீர்பாசன திணைக்களம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது, மேற்படி வயல் வெளிக்கு அருகாமையில் உள்ள பிச்சைவெளி ஆற்று ஓடையில் பூஜை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், பொங்கல் பொங்கி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில், தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஶ்ரீபதி, நீர்ப்பாசன திணைக்களத்தின் கந்தளாய் பிரதேச பொறியியலாளர் எஸ். ஏ.சி.எஸ்.சுர வீர மற்றும் கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்களின் உறுப்பினர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தேசிய கல்விக் கல்லூரி விண்ணப்பதாரிகளுக்கு மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் கருத்தரங்கு





**(கல்லடி நிருபர்)**

2021 மற்றும் 2022 உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் இரு தொகுதி ஆசிரிய பயிலுனர்களை ஒரே தடவையில் தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த நிலையில், மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் விண்ணப்பிக்கவுள்ள விண்ணப்பதாரிகளுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கு நேற்று குறிஞ்சாமுனை சக்தி வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி த.கணேசரெத்தினம், விரிவுரையாளர்களான சி.லோகராஜா, ச.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு பாடநெறி தெரிவு மற்றும் விண்ணப்பித்தல் தொடர்பாக தெளிவூட்டல்களை வழங்கியதோடு, விண்ணப்பதாரிகளின் சந்தேகங்களையும் போக்கினர்.

சிறப்பாக இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் பெருந்தொகையான விண்ணப்பதாரிகள் கலந்து கொண்டதோடு, வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான என்.குகதாசன், ரி.யசோதரன் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ரி. குணரெட்ணம் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

# மனிதநேயக் காப்பகத்தின் பாராட்டும், வரவேற்பும்

**(பழுவூரான்)**

மண்முனை தென் மேற்கு (பட்டிப்பளை) பிரதேச மனிதநேயக் காப்பகத்தின் ஏற்பாட்டில் இந்தியா – தமிழ்நாடு பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் பட்டிமன்றங்கள் நிகழ்த்திய கதிரவன் பட்டிமன்றப் பேரவையினரை வரவேற்றுப் பாராட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

மனிதநேய காப்பகத்தின் உப தலைவி திருமதி பிறேமாவின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மனிதநேய காப்பகத்தின் இணைப்பாளர் த. வசந்தராஜா பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் உப அதிபர் செ.முருகுப்பிள்ளை, முன்னாள் ஊர்போடியார் ஆசிரியர் கோ. சடாட்சரசிவம் மற்றும் மனிதநேயக் காப்பக பிரமுகர்கள், மாதர் சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கதிரவன் பட்டிமன்ற பேரவையினர் வரவேற்கப்பட்டு, பொன்னாடை அணிவித்து பரிசுப் பொருட்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.













# கோறளைப்பற்று வடக்கு வாகரையில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு



(பழுவூரான்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி “அவளது பலம் நாட்டிற்கு முன்னேற்றம்“ எனும் தொனிப்பொருளில் மகளிர் தின நிகழ்வு கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எந்திரி. ஜீ அருணனின் தலைமையில் கோறளைப்பற்று வடக்கு வாகரை கலாசார மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜெ.ஜெ முரளிதரன் முதன்மை அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

அத்துடன், சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

தொடர்ச்சியாக சிறந்த பெண் சுய தொழில் முயற்சியாளர்கள், தேசிய ரீதியில் தெரிவான மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இங்கு கலந்து கொண்ட பெண்கள், சிறுவர் அமைப்புக்களால் மகளிர் தின சிறப்பு பேச்சு, நடனம், பாடல், நாடகம் என நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன.

இந்த நிகழ்வில், பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி தலைமை முகாமையாளர், நிருவாக உத்தியோகத்தர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் மற்றும் சமூக தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.















# கிழக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் காத்தான்குடியில் விசேட இப்தார் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ. எச்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் காத்தான்குடி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று விசேட இப்தார் நோன்பு திறப்பு நிகழ்வு இடம்பெற்றது.

ரமழான் மாதம் தொடங்கி 11 நாள்கள் நிறைவடைந்துள்ளன. ஒவ்வொரு நாளும் பல்வேறு இடங்களில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சிகள் கிழக்கில் இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில், நேற்றைய இப்தார் நிகழ்வில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான முஸ்லிம்கள் பங்குபற்றினர்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அமைச்சர் அலி சப்ரி, மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணன், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எச். எம். எம். ஹரீஸ், அலிசாஹிர் மௌலானா, முஷாரப் முதுநபீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசல் சம்மேளனம், வர்த்தக சமமேளனம், ஜம்மியத் துல் உலமா காத்தான்குடி கிளை உட்பட அரச திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் அமைச்சர் அலி சப்ரி மற்றும் மலேசியா நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் சரவணன் ஆகியோருக்கு அல்குர்ஆன் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.










| | |
|---|---|
| **ROASTED CHILLI POWDER**<br>(Includes 14 spices)<br>250 G - 950/=, 100G - 395/= | **SPECIAL CUMIN SEED POWDER**<br>100G - 560/= |
| **UNROASTED CURRY POWDER**<br>250G - 850/=, 100G - 380/= | **CORIANDER POWDER**<br>100 G NEW - 190/= |
| **CHILLI POWDER**<br>100G - 290/= | **BLACK PEPPER POWDER**<br>100 G |

**FREE DELIVERY TO SPECIFIC AREAS**

**DELIVERY WILL BE CHARGED TO OTHER AREAS**

# தமிழக மீனவர்களை மீட்கக் கோரி மத்திய அரசுக்கு ஸ்டாலின் கடிதம்




இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை செய்யவும் வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 32 மீனவர்கள், எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என கூறி கடந்த 21 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளைச் செய்யவும் வலியுறுத்தி, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிடுகையில்,

"இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் அண்மைக் காலமாக தொடர்ந்து கைது செய்யப்படுவது ஆழ்ந்த வேதனையை அளிக்கிறது. கடந்த சில வாரங்களாக பல்வேறு சம்பவங்களில் இந்திய மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது, அவர்களது குடும்பத்தினரிடையேயும், மீனவ சமூகத்தினரிடையேயும் பெருத்த மன உளைச்சலையும், நிச்சயமற்ற சூழலையும் ஏற்படுத்தியுள்ளது. மார்ச் 21 ஆம் திகதியன்று தமிழகத்தைச் சேர்ந்த 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது 5 விசைப் படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 76 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சினையில் தாமதம் ஏதுமின்றி தீர்வு காண, தீர்க்கமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை நீதிமன்றங்களில் தண்டனை பெற்று, இலங்கை சிறைகளில் வாடும் மீனவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளை வழங்கிட வேண்டும்.

எனவே, இலங்கை அரசால் சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இலங்கைச் சிறைகளில் வாடும் மீனவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை உறுதி செய்திட வேண்டும்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# தஞ்சையில் வாக்கிங் சென்றபோது வாக்கு சேகரித்தார் முதல்வர் ஸ்டாலின்







மக்களவைத் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ள நிலையில் முதல்வர் ஸ்டாலின் இன்று காலை தஞ்சையில் நடைப்பயிற்சியின் போது வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது அங்கிருந்த பெண்கள், இளைஞர்கள், குழந்தைகள் முதல்வருடன் செல்ஃபி எடுத்துக் கொண்டனர்.

மக்களவைத் தேர்தலையொட்டி தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சியில் நேற்று பிரசாரத்தை தொடங்கினார். திருச்சி அருகே சிறுகனூரில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் திருச்சி வேட்பாளர் துரை வைகோ, பெரம்பலூர் வேட்பாளர் அருண் நேருவை அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து, தஞ்சாவூர் மக்களவை தொகுதி தி.மு.க. வேட்பாளர் முரசொலி,நாகப்பட்டினம் வேட்பாளர் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த செல்வராஜ் ஆகிய இருவருக்கும் வாக்கு கேட்டு, இன்று மாலை திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் முதல்வர் ஸ்டாலின் பிரசாரத்தில் ஈடுபடுகிறார்.



# மொஸ்கோ தாக்குதலில் பலி 60 ஆக அதிகரிப்பு

## ஐ.எஸ். பொறுப்பேற்பு

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்த அரங்கில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானோர் எண்ணிக்கை 60 ஆக அதிகரித்துள்ளது.

ஐ.எஸ். அமைப்பு இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது. இருப்பினும் அதன் நம்பகத்தன்மை இன்னும் அரசுத் தரப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்தத் தாக்குதலை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடுமையாகக் கண்டித்துள்ளார்.

ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் விளாடிமிர் புடின் அமோக வெற்றி பெற்றார். 200 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் தொடர்ச்சியாக 3 ஆவது முறையாக அஜனாதிபதியாகி ஸ்டாலினின் சாதனையை முறியடித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று இந்த கோரத் தாக்குதல் நடந்துள்ளது. ரஷ்யாவில் சமீப காலங்களில் நடந்த மிக மோசமான தீவிரவாத தாக்குதலாக இது அறியப்படுகிறது.

மொஸ்கோவின் மேற்குப் பகுதியில் உள்ள க்ரோகஸ் நகரின் மையத்தில் உள்ள 6200 பேர் அமரக்கூடிய பிரமாண்ட இசையரங்கில்தான் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

சம்பவத்தின் போது அங்கு ரஷ்ய பேண்ட் இசைக் குழுவான 'பிக்னிக்' குழுவின் இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. அப்போது திடீரென துப்பாக்கி குண்டுகள் பாய பலர் சரிந்து விழுந்தனர். துப்பாக்கிச் சூடு நடத்தியது மட்டுமல்லாது அரங்குக்கு தீவிரவாதிகள் தீவைத்தும் சென்றனர். உடனடியாக தகவலறிந்த பொலிஸ், தீயணைப்பு, பாதுகாப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்துவந்தனர்.

இந்த சம்பவத்தில் இதுவரை 60 பேர் பலியாகியுள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

பிரதமர் மோடி இத்தாக்குதலை கண்டித்து எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ள பதிவில்,

"மாஸ்கோவில் நடந்த கொடூர பயங்கரவாத தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்காக பிரார்த்தனைகள். ரஷ்ய அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் இத்துயரமான தருணத்தில் இந்தியா துணை நிற்கிறது." என்று பதிவிட்டுள்ளார்.

ரஷ்யாவில் ஐ.எஸ். அமைப்பு கடந்த சில வாரங்களாகவே பரபரப்பாக சதி வேலைகளை அரங்கேற்ற முயற்சித்து வந்தது தெரியவந்துள்ளது. மார்ச் 7 ஆம் திகதி ரஷ்யாவில் உள்ள யூத வழிபாட்டுத் தளத்தில் நடக்கவிருந்த தாக்குதலை உளவுத்துறை முறியடித்தது. அதற்கு சில நாள்களுக்கும் முன்னதாகத்தான் ரஷ்ய பாதுகாப்புப் படை ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த 6 பேரை சுட்டு வீழ்த்தியது. இந்த நிலையில் நேற்று இந்த கோரத் தாக்குதல் நடந்துள்ளது.

இதற்கிடையில், ரஷ்ய பாதுகாப்பு கவுன்சிலின் தலைவர் டிமிட்ரி மெத்வதேவ் இத்தாக்குதலின் பின்னணியில் உக்ரைன் சதி இருப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். ஆனால் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் ஆலோசகர் மிகைலோ போடோலியாக் இந்தக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள் ளார். உக்ரைன் ஒருபோதும் இது போன்ற தீவிரவாதத் தாக்குதலை ஊக்குவிக்காது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தோனேசியாவில் 100 பயணிகளுடன் கடலில் மூழ்கிய படகு: மீட்பு பணி தீவிரம்



பங்களாதேஷில் இருந்து படகு மூலம் சட்டவிரோதமாக இந்தோனேசியாவிற்கு செல்ல முயற்சித்த 100 இற்கும் மேற்பட்டவர்கள் கடலில் மூழ்கியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த பயணிகள் தொடர்பில் தகவலிருந்த இந்தோனேசிய பாதுகாப்பு துறையினர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பங்களாதேஷில் இருந்து ஏராளமான அகதிகள் கடல் வழியாக இந்தோனேஷியா, மலேசியா உள்ளிட்ட நாடுகளுக்கு படகில் தப்பி செல்வது கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.சட்டவிரோதமாக பாதுகாப்பு இல்லாமல் படகில் செல்வதால் விபத்துக்கள் ஏற்பட்டு பலர் உயிரிழந்தும் வருகின்றனர்.

இந்நிலையில் இந்தோனேஷியா வடக்கில் கோலா பூடான் கடற்கரையில் இருந்து சுமார் 25 கிலோ மீற்றர் தூரத்தில் மேற்படி படகு திடீரென கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதற்கமைய இது தொடர்பில் தகவலறிந்த இந்தோனேஷியா கடலோர படையினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கடலில் தத்தளித்த 60 பேரை அவர்கள் பத்திரமாக மீட்டுள்ளனர் எனவும் ஏனையவர்கள் தொடர்பில் எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

பக்கங்கள் 05

கனடா முரசு

சனிக்கிழமை 23/03/2024

**சொற்கோ வி.என். மதியழகன் தமிழ் ஒலிபரப்பில் பொற்காலம்**

**நூல் அறிமுக விழா**

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் இடம்பெறும் சொற்கோ வி.என். மதியழகன் தமிழ் ஒலிபரப்பில் பொற்காலம் C2



# கனடாவில் தற்போது நிலவிவரும் பனிப்புயல் மேலும் வலுவடையும்

## வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

**டொரொண்டோ,மார்ச் 23**
**கனடாவில் தற்போது நிலவிவரும் பனிப்புயல் மற்றும் பனிப்பொழிவானது மேலும் வலுவடையும் என அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இதன் காரணமாக டொராண்டோ பகுதி உள்ளிட்ட பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பில், 50 சென்ரி மீற்றர் வரை பனிப்பொழிவு காணப்படும் எனவும், பெப்ரவரி மாதத்தில் பதிவு செய்யப்பட்ட 6.4 சென்ரி மீற்றர் என்ற அளவை விடவும் அதிகம் என கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இன்று பனிப்பொழிவானது தீவிரமடையும் என்று கனடாவின் சுற்றுச்சூழல் மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடுமையான பனிப்பொழிவு காரணமாக, வாகன சாரதிகள் அவதானமாகச் செயற்படுமாறும் கூறப்பட்டுள்ளது .

கனடாவின் பிரதான நகரங்கள் உள்ளிட்ட அதனை சுற்றியுள்ள நகராட்சி பகுதிகளில் 10 சென்ரி மீற்றர் வரை பனி பொழியும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போது டொராண்டோவில் உள்ள பெரிய ஏரிகள் மற்றும் பிற இடங்களில் 50 சென்ரி மீற்றர் வரை பனிப்பொழிவு காணப்படும் என கூறப்பட்டுள்ளது.

எனினும் டொராண்டோ மற்றும் ஒட்டாவா போன்ற நகரங்களில் அடுத்த வாரமளவில் மிதமான வெப்பநிலை ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

# வசந்த காலம் ஆரம்பிக்கின்ற நிலையில் டொரொண்டோவில் கடும் பனிப்பொழிவு

குளிர்காலத்துக்கு விடைகொடுத்து வசந்த காலத்தை ஆரம்பிக்க இருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை டொரொண்டோவில் 15 தொடக்கம் 20 செ.மீ. அளவு பனிப்பொழிவு இடம்பெற்றது.

கனடாவின் தேசிய காலநிலை சேவை ஏற்கனவே இந்த பனிப்பொழிவு தொடர்பான எதிர்வு கூறலை வெளியிட்டு இருந்தது. அதனால் கடந்த புதன் கிழமை இதற்கான தயார்படுத்தலை டொரொண்டோ மாநகர நிர்வாகம் மேற்கொண்டு இருந்தது.

நேற்றைய மோசமான காலநிலை காரணமாகீநயசளழுெ விமான நிலையத்தில் பலவிமான சேவைகள் இரத்து செய்யப்பட்டன,காலதாமதமும் ஏற்பட்டது. இதனால் விமான




நிலையத்தை அண்மித்த பாதைகளில் பெரும் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

இன்றும் பனிப்பொழிவு இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# டொரொண்டோ விமான நிலையத்தில் அனுரகுமாரவுக்குப் பெரும் வரவேற்பு!

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசநாயக்க மக்கள் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக கனடா வருகை தந்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசநாயக்க கனடாவில் இரண்டு மக்கள் சந்திப் புகளில் கலந்து கொள்ளவுள்ளார்.

இன்று சனிக்கிழமை மதியம் 2.30 மணிக்கு Toronto pavilion லும் நாளை ஞாயிற்றுக்கிழமை Vancouver லும் இந்த மக்கள் சந்திப்புகள் நடைபெற உள்ளன.




## சொற்கோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நூல் அறிமுக விழா இன்று இடம் பெறுகின்றது.

ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் இன்று பிற்பகல் 2.15 மணிக்கு இந்த விழா ஆரம்பமாகவுள்ளது.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் பல்கலைவித்தகர் அகணி சுரேஷ் தலைமையில், ஈகை நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் வடிவேலு சாந்தகுமார் முன்னிலையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் முன்னாள் பாதுகாப்பு நிபுணர் இன்பஜோதி நித்தியராஜ் செல்லப்பு கலந்துகொள்கின்றார்.

நூல் நயவுரையை முனைவர் மைதிலி தயாநிதி, முனைவர் வாசுகி நகுலராஜா நிகழ்த்தவுள்ளனர்.



# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

## Super Deal of this Week


**till March 25th**




LOWEST PRICE ~~10.99$~~ 8.99 Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE ~~19.99$~~ 15.99 Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE LB 7.99$ Only at GUNAAM'S SUPER MARKET

ஊர் ஆட்டிறைச்சி



LOWEST PRICE LB 6.99$ Only at GUNAAM'S SUPER MARKET

Ceylon விளைமீன்

## Gunaam's super market இந்த வாரம் அள்ளித்தரும் Super Deal

அனைத்து Fresh மீன்கள் மிக மிக குறைந்த விலையில்...

| | |
|---|---|
| Ceylon விளைமீன் | - $6.99 lb |
| Ceylon ஓரா | - $6.99 lb |
| Ceylon சீலா Fish | - $7.99 lb |
| Ceylon கும்பிளா Fish | - $6.99 lb |
| Ceylon பாரை Fish | - $7.99 lb |
| Ceylon கொடுவா Fish | - $8.99 lb |
| சுறா Fish | - $6.99 lb |

| | |
|---|---|
| இறால் | - $3.99 lb |
| ஊர் ஆட்டிறைச்சி | - $7.99 lb |
| காரல் Fish | - $7.99 lb |
| திரளி மீன் | - $7.99 lb |
| காட்டுப் பன்றி | - $4.99 lb |
| முழு King Fish | - $6.99 lb |

| | |
|---|---|
| 10 Kg Double Horse Rice | - $23.99 |
| Maharaja Rice Flour | - $8.99 |
| Maharaja Basmati Rice | - $13.99 |
| MR Goudas Sun Flower oil 3L | - $8.99 |
| MR Goudas Sea Salt | - $1.49 |

| | |
|---|---|
| MR Goudas Coconut Powder 3 For | - $10.00 |
| Nestum Serial | - $5.99 |
| Waadiya Coconut Milk Powder | - $2.99 |
| Raigum Noodles 2 for | - $5.00 |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998

# 1983 இன் பாலியல் கொடூரக் கொலைகளுக்கு 40 வருடங்களின் பின்னர் 21 ஆண்டுகள் சிறை!

## டவுன்டவுன் டொராண்டோ நீதிமன்றம் விதித்தது



1983 ஆம் ஆண்டு டொராண்டோவில் இரண்டு பெண்களின் கொடூரமான கொலைகளைத் தாம் செய்தார் ஒப்புக்கொண்ட நபர் 21 ஆண்டுகள் பரோல் இல்லாமல் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்.

ஜோசப் ஜார்ஜ் சதர்லேண்ட் என்ற இந்தக் குற்றவாளிக்கு நேற்று வெள்ளிக்கிழமையன்று டவுன்டவுன் டொராண்டோ நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி மொரீன் ஃபாரெஸ்டெல் தண்டனை வழங்கினார்.

எரின் கில்மோர் மற்றும் சூசன் டைஸ் ஆகியோரின் மரணம் தொடர்பாக சதர்லேண்ட் இரண்டாம் நிலை கொலை என்ற இரண்டு குற்றச்சாட்டுகளை கடந்த ஒக்டோபரில் ஒப்புக்கொண்டார்.

“சதர்லேண்ட் செய்த இரண்டு கொலைகளும் மிகவும் தீவிரமானவை” என்று ஃபாரஸ்டெல் கூறினார். “அவர்கள் தங்கள் வீடுகளில் கொல்லப்பட்டனர், வீடுகள் சரணாலயமாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில், வன்முறையின் தாக்கம் மற்ற பாதிக்கப்பட்டவர்களால் – குடும்பங்கள் மற்றும் நண்பர்களால் – தொடர்ந்து உணரப்படுகிறது.” – என்றார் அவர்.

சுரங்க அதிபர் டேவிட் கில்மோரின் மகளான கில்மோருக்கு 22 வயதாக இருந்தபோது, டிசம்பர் 20, 1983 அன்று இரவு யார்க்வில்லி குடியிருப்பில் கத்தியால் குத்தி, கழுத்தை நெரித்து, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்.

அந்த ஆண்டின் தொடக்கத்தில், சூசன் டைஸ், கில்மோரின் குடியிருப்பில் இருந்து சில கிலோமீட்டர் தொலைவில் உள்ள அவரது பிக்ஃபோர்ட் பார்க் வீட்டில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி குத்திக் கொல்லப்பட்டார்.

சதர்லேண்ட் கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக கைது செய்யப்படவில்லை. அந்த நேரத்தில் அவர் பல கட்டங்களில் தன்னைத்தானே திருத்திக் கொள்ள நினைத்தார் ஆனால் அதற்கு எதிராகத் தேர்வு செய்தார் என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

நவம்பர் 2022 வரை, மரபணுத் தொழில்நுட்பத்தின் முன்னேற்றங்கள் இரண்டு குற்றக் காட்சிகளிலிருந்தும் ஆதாரங்களை இணைக்க அதிகாரிகளுக்கு வழிவகுத்தது. அதனை அடுத்து சதர்லேண்ட் ஒன்ட்டின் மூசோனியில் உள்ள ஓர் இல்லத்தில் கைது செய்யப்பட்டார்.

# தவறான வரி வெளிப்படுத்தலுக்காக கணக்காளருக்கு 3 ஆண்டுகள் சிறை




ஒண்டாரியாவின் பிராம்ப்டனைச் சேர்ந்த நபர் ஒருவர் வாடிக்கையாளர்களுக்காகத் தயாரித்த வரிக் கணக்குகளில் 34 மில்லியன் டொலர் மதிப்புள்ள தொண்டு நன்கொடைகளை பொய்யாகக் கூறினார் என்ற குற்றத்தை ஒப்புக் கொண்ட பிறகு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

கனேடிய வரி அதிகாரிகள் நேற்று வெள்ளிக்கிழமை ஒரு செய்தி வெளியீட்டில் நீதிமன்ற நடவடிக்கைகளின் விவரங்களுடன் தண்டனையை அறிவித்தனர்.

நு ரூ கு வயழ யுளஉழஉயைவநள எனப்படும் வரி தயாரிப்பு வணிகத்தில் பெஸ்டஸ் பெய்டன் என்ற இந்த நபர் பங்குதாரராக இருக்கின்றார் என கனடா வருவாய் முகமை தெரிவித்துள்ளது. டொராண்டோ மற்றும் பிராம்ப்டனில் உள்ள பேங்கே ஃபைனான்சியல் சர்வீசஸ் இன்க் மூலம் இந்த வணிகம் செயற்பட்டது.

2004 முதல் 2006 வரையிலான வரி ஆண்டுகளில் 30க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்காகத் தயாரித்த தனிநபர் வருமான வரி வருமானத்தில் 34 மில்லியன் டொலருக்கும் க்கும் அதிகமான தவறான தொண்டு நன்கொடைகளை பேடன் கோரினார் என்று கனடாவருவாய்முகமைவிசாரணையில் கண்டறியப்பட்டது.

பேடன் தனது வாடிக்கையாளர்களிடம், அவர்களின் வருமான வரிக் கணக்கில் உண்மையில் கோரப்பட்டதை விட மிகக் குறைவான தொகைக்கு தொண்டு நன்கொடை அளித்தால், பெரிய தொகையை திரும்பப் பெறலாம் அல்லது குறைக்கப்பட்ட வரிகளைப் பெறலாம் என்று கூறினார் என்று கனடா வருவாய் முகமை கூறியது.

பேடன் குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர் கனடாவை விட்டு வெளியேறினார். ஆனால் அவர் ஜூன் 13, 2023 அன்று நாடு திரும்பியபோது காவலில் வைக்கப்பட்டார்.

பிப்ரவரி 27, 2024 அன்று, பிராம்ப்டனில் உள்ள ஒன்டாரியோ நீதிமன்றம் அவருக்கு 5,000 டொலருக்கும் அதிகமான மோசடி செய்த குற்றத்தை ஒப்புக்கொண்ட பிறகு அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது.



# ஒட்டாவாவின் வெஸ்ட்போரோ பகுதியில் பொலிஸாரின் சூட்டில் பெண் படுகாயம்!

ஒட்டாவாவின் வெஸ்ட்போரோ பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒட்டாவா பொலிஸ் அதிகாரியால் சுடப்பட்ட பெண் ஒருவர் மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் உள்ளார்.

ஒன்ராறியோவின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு இவ்விடயத்தை விசாரித்து வருகிறது.

இந்த விடயம் நேற்று மதியம் 1:30 மணியளவில் தொடங்கியது என்று ஒன்ராறியோவின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு கூறுகிறது.

சம்பவத்தை அடுத்து சர்ச்சில் அவென்யூ மற்றும் அவண்டேல் அவென்யூ பகுதியில் பொலிஸார் போக்குவரத்து நிறுத்தம் செய்தனர். 25 வயதுடைய பெண் ஒருவர் காரில் இருந்து இறங்கி ஓடினார், அவரை பொலிஸ் அதிகாரி ஒருவர் பின் தொடர்ந்தார்ப்என ஒன்ராறியோவின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

"ஒரு சமயத்தில் அதிகாரி தனது துப்பாக்கியை வெளியேவெடுத்துச் சுட்டார். அந்த பெண் சூட்டுக்கு இலக்கானார். அவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அந்த பெண் ஆபத்தான நிலையில் உள்ளார்" என்று சிறப்புப் புலனாய்வுப் பிரிவு கூறியது.

அந்தப் பகுதி போக்குவரத்துக்கு மூடப்பட்டது. "பொது பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை" என்று பொலிஸார்தெரிவித்தனர்.

ஒட்டாவா துணை மருத்துவ செய்தித் தொடர்பாளர் கூறுகையில், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஆபத்தான நிலையில் ஒரு பெண்ணை துணை மருத்துவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

மரணம்,கடுமையான காயம், பாலியல் வன்கொடுமை மற்றும் அல்லது ஒரு நபர் மீது துப்பாக்கிச் சூடு விளைவித்த அதிகாரிகளின் நடத்தையை சிறப்புப் புலனாய்வுப் பிரிவு ஆராய்கிறது.

இந்த சம்பவம் குறித்து சிறப்புப் புலனாய்வுப் பிரிவு வேறு எந்த தகவலையும் வழங்கவில்லை.

இந்த வழக்கில் மூன்று புலனாய்வாளர்கள் மற்றும் இரண்டு தடயவியல் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வீடியோ அல்லது புகைப்படங்கள் உட்பட, இந்த விசாரணையைப் பற்றிய தகவல் யாரேனும் இருந்தால், முதன்மை புலனாய்வாளரை தொடர்பு கொள்ளுமாறு சிறப்புப் புலனாய்வுப் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

# கனேடிய தமிழர் கூட்டின் ஏற்பாட்டில் 'விழிப்பின் குரல்' மக்கள் சந்திப்பு

## இன்று பிற்பகல் ஸ்கார்புரோவில் நடக்கின்றது

கனேடிய தமிழர் கூட்டின் 'விழிப்பின் குரல்' எனும் மக்கள் சந்திப்பு இன்று நடைபெற உள்ளது.

கனேடிய தமிழர் பேரவையை மறுசீரமைக்கும் கோரிக்கையோடு கனடிய தமிழர் கூட்டு கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் முதலாவது மக்கள் சந்திப்பு இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் 4 மணி வரை Scarborough வில் உள்ள தமிழிசை கலாமன்றத்தில் நடைபெற உள்ளது.

இந்த சந்திப்பின்போது கனடாவிலும் ஈழத்திலும் வாழும் தமிழ் சமூகத்திற்கு சிறப்பாக சேவையாற்று முகமாக வெளிப்படுத்தல் தன்மையையும் பொறுப்பு கூறலையும் உறுதி செய்யும் வகையில் கனடிய தமிழர் பேரவையைச் சீரமைத்தல் மற்றும் இமாலய பிரகடனம் எனும் செயல் திட்ட நடவடிக்கையால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்களை மதிப்பாய்வு செய்தல் என்பன இடம் பெறவுள்ளன.

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு